Register No. | | | | | | | | |

**FA9A** **5847–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY LIBRARY

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the scope, extent and objects of the Juvenile Justice (Care and Protection of Children) Act. Mention the legislative changes brought after Nirbhaya – Delhi Gange rape case.

   சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் காப்பு) சட்டத்தின் பொருள், நோக்கம் மற்றும் பரவெல்லை – ஆகியவற்றை விவாதிக்கவும். டெல்லி குழு வன்புணர்வு – நிர்பயா வ்ழக்கிற்கு பின் சட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை குறித்து எழுதுக.

2. Write an essay on “Arrest and Bail”.

   “கைது மற்றும் பிணை” குறித்து கட்டுரை வரைக.

3. Define – Investigation and differentiate it from Trial.

   புலன்விசாரணை – வரையறு மற்றும் நீதிமன்ற விசாரணையில் இருந்து வேறுபடுத்துக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is Charge? State briefly the particulars to be mentioned in a charge.

   குற்றச்சாட்டு என்றால் என்ன? குற்றசாட்டில் குறிப்பிடப்பட வேண்டிய விவரங்களை சுருக்கமாக கூறவும்.

5. What is Remission? Explain briefly the provisions of Criminal Procedure Code regarding execution and suspension of death sentence.

தண்டனைக் குறைப்பு என்றால் என்ன? குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மரண தண்டனையை நிறைவேற்றுதல் மற்றும் நிறுத்தி வைத்தலுக்கான உரிய விதிமுறைகளை சுருக்கமாக கூறுக.

6. Narrate the salient features of the Probation of Offenders Act – 1958.

குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம்–1958ன் சிறப்பியல்புகளை எடுத்தியம்புக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Judgement under Criminal Procedure Code.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கீழ் தீர்ப்பு.

(b) Police Report.

காவல் அறிக்கை.

(c) Importance of Court questions under Section 313 of the Criminal Procedure Code?

குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313ன் கீழ் நீதிமன்றம் வினவக் கூடிய வினாக்களின் முக்கியத்துவம் என்ன?

(d) Summary trial and its Judgment.

சுருக்குமுறை விசாரணை மற்றும் அதன் தீர்ப்பு.

(e) Disposal of Case Property.

வழக்கு சொத்துகளை வகைசெய்தல்.

(f) Payment of Compensation.

நஷ்டஈடு வழங்குதல்.

(g) Maintenance under Section 125 Cr. P.C.

குவி.மு.ச. பிரிவு 125ன் கீழ் ஜீவனாம்சம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. ‘A’ in his trial for rape of ‘C’ admits his guilt before the Court of law. Can the Statement made by ‘A’ used against his own self? – Discuss.

‘அ’ என்பவர் மீது ‘இ’யை வன்புணர்வு செய்ததாக வழக்கு. அவர் தம் விசாரணையில் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவரின் வாக்கு மூலத்தை அவருக்கு எதிராக பயன்படுத்திட இயலுமா? விவாதிக்கவும்.

9. A case was pending before the Special Court constituted under the Protection of Children from Sexual Offences Act (POCSO). During the proceedings the victim cum Prosecution witness, who was a minor, attained majority. Thus, she pleads to transfer the case from the Special Court to Mahila Court. Decide.

குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்டம் (போக்ஸோ) கீழ் அமையப்பெற்ற சிறப்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சி வயதுக்கு வந்து விடுகிறார். அதனால் அவள் தமது வழக்கை சிறப்பு நீதிமன்றத்தில் இருந்து மகளிர் நீதிமன்றத்திற்கு மாற்ற கோருகிறார் – தீர்மானிக்க.

10. Shanmuga Priya, a Women Police Officer, suspiciously died in her camp office. An F.I.R. was filed, a Preliminary investigation was conducted by the local Police. During the course of investigation, the State Government transferred the case to CBCID. But, Priya's father Vishnu who was not satisfied with the State Police Investigation and approached the Court; and claimed to transfer the case to CBI. Decide.

சண்முக பிரியா, பெண் காவலதிகாரி, சந்தேகத்திற்கு இடமான முறையில் அவருடைய தங்குமிட அலுவலகத்தில் மரணமடைந்தார். முதல் தகவலறிக்கை பதியபட்டு முதல் புலன் விசாரணையை உள்ளூர் போலீஸார் மேற்கொண்டனர். மாநில அரசு விசாரணையை மாநில குற்றபுலனாய்வு அமைப்பிற்கு வழக்கை மாற்றியது. பிரியாவின் தந்தை விஷ்ணு மாநில அரசின் புலன் விசாரணையில் மனநிறைவு கொள்ளாததால் நீதிமன்றத்தை அணுகி மையப் புலன் விசாரணை. அமைப்பின் புலன் விசாரணை கோருகிறார் – தீர்வு செய்க.

---

Register No. | | | | | | | | |

# FA9B

5848-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

CIVIL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the meaning of the term "prescribed period of limitation" under the Law of Limitation Act.

   "குறிப்பிட்ட கால வரையரை" என்ற வாக்கியத்தை காலவரையறை சட்டத்தின் கீழ் விவரிக்க.

2. State the rules relating to plaint and amendment of plaint under the Civil Procedure Code.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட வழக்குரை பற்றிய விதிகளைக் கூறுக.

3. Examine Appellate Jurisdiction of the High Court under the Civil Procedure Code.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு அதிகார ஆள்வரையை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss in detail the procedure for filing a suit by (or) against Government.

   அரசுக்கு எதிராக (அல்லது) அரசு சார்பாக உரிமையியல் வழக்கு தொடர்வதற்கான நடைமுறை விதிகளை விவரி.

5. Explain the provisions relating to the transfer of Civil Suit.

ஒரு உரிமையியல் வழக்கு விசாரணை இடமாற்றத்திற்கான வகையங்களை விளக்குக.

6. State briefly the various grounds on which the High Court could be approached by lower court for reference.

கீழமை நீதிமன்றம் சாட்டுகைக்காக உயர்நீதிமன்றத்தினை அணுகுவதற்கான காரணங்களை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Place of Suing

வழக்கு தொடரும் இடம்

(b) Res sub judice

வழக்கிணை நிறுத்தி வைத்தல்

(c) Garnishee Order

பொருள் பற்றுகை ஆணை

(d) Ex-Parte Order

ஒரு தலைப்பட்ச உத்தரவு

(e) Return of Plaint

வழக்குரையினை திருப்புதல்

(f) Review

மறு ஆய்வு

(g) Pauper suit

வறியவர் வழக்கு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' published a defamatory statement against 'Y'. Hence 'Y' filed a suit against 'X' for claiming damages. 'X' died leaving his son $X_1$ as his legal heir, whether the suit will continue against $X_1$ ?

X என்பவர் Y என்பவருக்கு எதிராக சில அவதூறு செய்திகளை வெளியிடுகிறார். அதற்கு Y, X என்பவருக்கு எதிராக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். X தனது மகன் $X_1$ என்பவரை வாரிசாக விட்டு விட்டு இறந்து விடுகிறார். அந்த வழக்கு $X_1$ என்பவருக்கு எதிராக தொடர்ந்து நீடிக்குமா?

9. Ramesh and Suresh are neighbours. Rajesh another neighbour caused disturbance to Ramesh and Suresh by loud music in his house during night hours. Ramesh instituted suit and claimed damages against nuisance. But the court dismissed the suit. Can Suresh file review petition against Rajesh before the same court?

ரமேஷ் மற்றும் சுரேஷ் பக்கத்து வீட்டுக்காரர்கள். ராஜேஷ் என்பவரும் ஒரு பக்கத்து வீட்டுக்காரர்தான். அவர் இரவு நேரங்களில் தனது வீட்டில் இசை கேட்பதாக கூறி அதிக சத்தம் எழுப்பி ரமேஷ் மற்றும் சுரேஷ்யை அதிகம் தொந்தரவு செய்து வருகிறார். இதனால் ராஜேஷ்க்கு எதிராக ரமேஷ் தொல்லை ஏற்படுத்துவதால் நஷ்டஈடு கோரி வழக்கிடுகிறார். இப்போது நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்கிறது. எனவே சுரேஷ், ராஜேஷ்க்கு எதிராக மறு ஆய்வு மனு தாக்கல் செய்ய இயலுமா? தீர்மானிக்கவும்.

10. HCL has its registered office at New Delhi and used to run business in Cochin through its branch. As per official information, Head Office only have jurisdiction for civil remedy. One Mrs. Sundari who resides at cochin was aggrieved by the branch HCL Company. She instituted and initiated damages civil suit at Cochin. The Court rejected the plaint. What is the remedy Sundari has, advise?

HCL நிறுவனம் புதுடெல்லியை தலைமை இடமாக கொண்டுள்ளது. கொச்சியிலும் ஒரு கிளையினை கொண்டுள்ளது. சுந்தரி என்பவர் கொச்சி HCL நிறுவனத்தால் பாதிக்கப்பட்டதற்காக உரிமையியல் வழக்கு தொடர்கிறார். அலுவலக செய்திப்படி தலைமை இடத்திற்கு மட்டுமே வழக்கிற்கான பரிகாரம் வழங்க இயலும். எனவே கொச்சி நீதிமன்றம் வழக்குரையை தள்ளுபடி செய்கிறது. சுந்தரிக்கு உள்ள பரிகாரம் என்ன? ஆலோசனை வழங்குக.

---

Register No. | | | | | | | | |

**FA9C**

**5849-23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

LAW OF TAXATION

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate the Constitutional provisions relating to Law of Taxation.

   வரிச்சட்டம் குறித்த அரசமைப்பு ஷரத்துகளை தொகுக்கவும்.

2. What is Income from House Property? Explain the procedure of computation of Income under House Property.

   வீட்டு சொத்திலிருந்து பெறப்படும் வருமானம் என்றால் என்ன? வீட்டுச் சொத்திலிருந்து வரும் வருமானத்தினை கணக்கிடும் முறையினை விளக்குக.

3. Discuss about kinds of Duties imposed under the Customs Act, 1962.

   சுங்க வரிச்சட்டம், 1962-ன் கீழ் விதிக்கப்படும் வரிகளை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate any ten incomes which do not form part of the total income.

   மொத்த வருமானத்தில் சேராத ஏதேனும் 10 வருமானங்களை பட்டியலிடுக.

5. Explain transaction value under the Tamil Nadu Goods and Services Tax Act, 2017.

   தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம், 2017-ன் வரி விதிப்பிற்குரிய வழங்கீடு மதிப்பை விளக்கிக் கூறுக.

6. Explain the Prohibited goods for Export and Import under the Customs Act, 1962.

1962-ம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின், கீழ் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்கள் குறித்து விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Income from other sources.

மற்ற மூலங்களிலிருந்து பெறப்படும் வருமானம்.

(b) Professional Income.

தொழிற்வருமானம்.

(c) Short term Capital Gain.

குறுகிய கால மூலதன ஆதாயம்.

(d) Double Taxation.

இரட்டை வரிவிதிப்பு.

(e) Canons of Taxation.

வரிவிதிப்புக் கொள்கைகள்.

(f) Historical Development of Tax on Supply of Goods and Services.

சரக்குகள் மற்றும் சேவை வரி குறித்த வரலாற்றினை விளக்குக.

(g) Search, Seizure and Arrest under the Central Goods and Services Tax Act, 2017.

மத்திய சரக்குகள் மற்றும் சேவை வரிச்சட்டம், 2017ன் கீழ் சோதனை, ஜப்தி மற்றும் கைது.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி விடையளிக்கவும்.

8. How the following are treated for assessment of Income Tax for the Assessment Year 2023-2024.

(a) Income of Local authority

(b) Income of Charitable Organization.

பின்வருவனவற்றிற்கு வரி விதிப்பாண்டு 2023-2024ன் வருமானவரி எவ்வாறு மதிப்பிடப்படுகிறது?

(அ) உள்ளாட்சி அமைப்பின் வருமானம்

(ஆ) தொண்டு அமைப்பின் வருமானம்

9. Dhanyasree is a Government Employee. Her annual Income for the previous year 2022-2023 is Rs. 16,75,000/-. Find out the tax liability of herself for the year 2022-2023.

தன்யஸ்ரீ என்பவர் ஓர் அரசு அலுவலர். அவருடைய முந்தைய ஆண்டு 2022-2023க்கான வருமானம் ரூ. 16,75,000/- ஆகும். அவர் செலுத்த வேண்டிய 2022-2023 ஆண்டிற்கான வரி செலுத்து வீதத்தினை கண்டறிக.

10. Mrs. Emi, a State Government Employee received income for the previous year 2022-23 as follows :

| Income Schedule | | Rs. |
|---|---|---|
| Basic Salary | – | 4,00,000 p.a. |
| Dearness Allowance | – | 3,00,000 p.a. |
| House Rent Allowance | – | 1,20,000 p.a. |
| Medical Allowance | – | 30,000 p.a |

House Rent paid Rs. 12,000 p.m. She subscribes LIC for Rs. 1,00,000/-. She paid Rs. 60,000 as tution fees for her two children. Determine taxable liability of Mrs. Emi.

திருமதி. எமி ஒரு அரசு ஊழியர் ஆவார். அவருடைய முந்தைய ஆண்டு 2022-23-க்கான மொத்த வருமானம் பின்வருமாறு :

| வருமான பட்டியல் | | ரூ. |
|---|---|---|
| அடிப்படை சம்பளம் | – | ரூ. 4,00,000 p.a. |
| அகவிலைப்படி | – | ரூ. 3,00,000 p.a. |
| வீட்டு வாடகைப்படி | – | ரூ. 1,20,000 p.a. |
| மருத்துவப் படி | – | ரூ. 30,000 p.a. |

அவர் வீட்டு வாடகையாக மாதம் ரூ. 12,000/- செலுத்துகிறார். ஆயுள் காப்பீட்டிற்கான ஆண்டு சந்தா ரூ. 1,00,000/- செலுத்தியுள்ளார். மேலும் அவரது இரண்டு குழந்தைகளுக்கு ரூ. 60,000/- கல்வி கட்டணம் செலுத்தியுள்ளார். எனில் அவரது வரி செலுத்து விகிதத்தினை கண்டறிக.

———————